


வேலூர் மாவட்டம் காட்பாடி காந்தி நகர் பகுதியில் உள்ள புதிய ரேஷன் கடையை நீர்வளத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் திறந்து வைத்தார். உடன் மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி, வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், நாடாளுமன்ற உறுப்பினர் டி.எம்.கதிர்ஆனந்த், மாவட்ட பொருளாளர் சி.நரசிம்மன், மண்டலக் குழு தலைவர் புஷ்பலதா வன்னியராஜா, பகுதி செயலாளர் என். பரமசிவம், மாமன்ற உறுப்பினர் சிவசங்கரி பரமசிவம், மாநகர துணை செயலாளர் ஒய்.தேவநேசன், வட்ட செயலாளர் அரிகிருஷ்ணன், சி.கிரி, மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் ஜி.மகேஷ், மாநகர பிரதிநிதிபன்னீர், வட்ட அவைத்தலைவர் உதயகுமார், முன்னாள் அவைத் தலைவர் எம்.சுரேஷ், பகுதி இளைஞர் அணி அமைப்பாளர் ஏ.சுரேஷ் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை !... முதல் பக்கத் தொடர்ச்சி

**யாராலும் வேலை செய்ய முடியாது. இன்னும் சொல்ல வேண்டும் என்றால், 1967-இல் பேரறிஞர் அண்ணா தலைமையில் ஆட்சி அமைந்தபோது அன்றைக்கு முன்னாள் முதலமைச்சராக இருந்த பெரியவர் பக்தவச்சலம் அவர்கள் பத்திரிகையாளர்களிடம் பேட்டி அளித்தபோது ஒன்றைக் குறிப்பிட்டுச் சொன்னார். "தி.மு.க.-காரன் ஒரு சிங்கில் டீயை குடித்து விட்டு பம்பரமாக வேலை செய்வான். அதற்கு நாமெல்லாம் ஈடாக முடியாது" என்று வெளிப்படையாகவே சென்னவர் அவர். அதே உணர்வோடு இன்றைக்கும் நான் பார்க்கிறேன்.**



**இந்த சிறப்பான நிகழ்ச்சியை - அது எந்த நிகழ்ச்சியாக இருந்தாலும் - கிழக்கு மாவட்டத்தின் செயலாளராக நம்முடைய சேகர்பாபு அவர்கள் இருந்தாலும், நம்முடைய தொகுதி என்று சொன்னால் அதில் ஒரு எழுச்சி இருக்கும், ஒரு சிறப்பு இருக்கும், ஒரு மகிழ்ச்சி இருக்கும், ஒரு ஆர்வம் இருக்கும், ஆரவாரம் இருக்கும். நம்மையே அறியாமல் நம்முடைய உள்ளத்தில் ஒரு புளகாங்கிதம் இருக்கும். அந்த உணர்வோடு இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்திருக்கும் நம்முடைய சேகர்பாபு அவர்களுக்கும் அவருக்குத் துணை நின்ற கழக நிருவாகிகளுக்கும் நான் முதலில் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.**

### 200 தொகுதிகளுக்கு மேல் நாம் வெற்றி பெறுவோம்!

நீங்கள் ஆற்றக்கூடிய பணிகள், ஏதோ கொளத்தூர் தொகுதியில் மட்டுமல்ல. ஒட்டுமொத்தமாக தமிழகத்தில் இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் நம்முடைய செயல் வீரர்கள் ஆற்றும் அந்தப் பணிகளையெல்லாம் பார்க்கின்றபோது - 200 தொகுதிகளுக்கு குறையாமல் வெற்றி பெறுவோம் என்று, நம்முடைய கூட்டணி நிச்சயமாக வெற்றிபெறும் என்று நான் ஏற்கெனவே சொல்லியிருந்தேன், ஆனால், நாம் இப்போது ஆற்றியிருக்கும் பணிகளையெல்லாம் பார்க்கின்றபோது 200 தொகுதிகளையும் தாண்டி வரும் என்ற நம்பிக்கை எனக்கு வந்திருக்கிறது. அந்த நம்பிக்கையோடு பொங்கல் விழாவை நாம் கொண்டாடுகிறோம்.

பொங்கல் விழாவைக் கொண்டாடும் இந்த நேரத்தில் உங்கள் அத்தனை பேருக்கும் என்னுடைய பொங்கல் வாழ்த்துகளைத் தெரிவித்து வரவிருக்கும் தேர்தலில் ஒரு மாபெரும் வெற்றி பெறுவதற்கு உறுதியெடுப்போம் சபதம் எடுப்போம், என்று கூறி மீண்டும் வாழ்த்து சொல்லி விடைபெறுகிறேன்.

இவ்வாறு முதல்வர் அவர்கள் உரையாற்றினார்.

# சித்தி புத்தி!



## கேட்டியாடி கதைய

"தமிழகம்
என்ன தான்
இந்த தேசத்திற்கு
வரி வருவாயை
வாரி வாரிக் கொடுத்தாலும்

தங்களுக்கு
ஓட்டுப் போட மறுக்கும்
தமிழ்நாட்டின்
மீதும்
தமிழ் மக்களின்
மீதும்

வடக்கிந்திய கம்பெனிக்கு
அளவற்ற
வெறுப்பு..

அதனை
தீர்த்துக்கொள்ள
அ.தி.மு.க.வை
பிணைக் கைதியாக
பிடித்துக்கொண்டு

வெறி பிடித்து அலையும்
அவர்களுக்கு
வாய்ப்புக்
கொடுத்தால்

புத்திசாலிப் பிள்ளை
சித்தி கொடுமையில்
சிக்கி சீரழிந்த கதையாகி விடும்"..

ஆம்...

பின்னிப் பெடலெடுத்து
நம்மை
பீகாருக்கும்
கீழே தள்ளி விடுவார்கள்..

அதனால..

அழுத்திச்
சொல்வோம்

"வேண்டும்
ஸ்டாலின்

மீண்டும்
ஸ்டாலின்"

**என்னநாஞ்**
**சொல்றது**



**மருது அழகுராஜ்**
கழக செய்தித் தொடர்புக் குழு
துணைத் தலைவர்

## திருப்பூர் வடக்கு தொகுதிக்கான விளையாட்டுப் போட்டிகள்!

# திராவிட பொங்கல் - சமூக நீதிக்கான திருவிழா கொண்டாட்டம்!

### மாவட்டப் பொறுப்பாளர் - மேயர் ந.தினேஷ்குமார் அறிக்கை!

திருப்பூர், ஜன.12-

திருப்பூர் வடக்கு மாவட்ட பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந. தினேஷ்குமார் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

தமிழ்நாடு முதலமைச்சர், கழக தலைவர், தளபதி மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர், விளையாட்டுத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டு தலின் பேரில் திருப்பூர் வடக்கு சட்டமன்ற தொகு திக்கான விளையாட்டுப் போட்டிகள் வருகிற 12.01.2026 திங்கட்கிழமை காலை 09.00 மணி முதல் மாலை வரையிலும், 13.01.2026 செவ்வாய்க் கிழமை காலை 09.00 மணி முதல் மாலை வரை இரண்டு நாட்கள் திருப்பூர், பி.என்.ரோடு, பாண்டியன் நகர், பஸ் ஸ்டாப் மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இப்போட்டிகள் கீழ்க்கண்ட விதிமுறைகளின்படி நடக்கவுள்ளயது.

12.01.2026 திங்கட் கிழமை திருப்பூர் வடக்கு மாநகர மண்டலம் 1, மண்டலம் 2, திருப்பூர் ஒன்றியம் ஆகிய பகுதிகளைச் சார்ந்தவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

விளையாட்டுப் போட்டிகள் மற்றும் விதி முறைகள்

1.கபாடி ஆண்கள், பெண்கள் வயது வரம்பு இல்லை

2. கிரிக்கெட் ஆண்கள், பெண்கள் வயது வரம்பு இல்லை

3. மிதிவண்டி போட்டி (Slow Cycle Race) ஆண்கள், பெண்கள் வயது வரம்பு இல்லை

4. கோகோ ஆண்கள் மற்றும் பெண்கள் வயது வரம்பு இல்லை

5. மேற்கண்ட விளையாட்டுகளில் அந்தந்த மாநகரம், 1, 2, மண்டலங்கள், நகரம், ஒன்றியத்தில் வசிப்பவர்கள் மட்டும் கலந்து கொள்ள வேண்டும்.

6. அந்தந்த பகுதியில் வசிப்பவர்கள் ஆதார் அட்டை கொண்டு வருதல் வேண்டும்.

7. 12.01.2026ம் தேதி அனைவருக்கும் மதிய உணவு ஏற்பாடு செய்யப் பட்டுள்ளது.

8. நுழைவுக் கட்டணம் ஏதும் இல்லை.

மேற்கண்ட விளையாட்டுப் போட்டி களில் வெற்றி பெறும் 4 அணிகளுக்கு கீழ்க்கண்ட பரிசுகள் வழங்கப்படும்.



முதல் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பை யும், நான்காம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பையும் வழங்கப்படுகிறது.

மேற்கண்ட போட்டிகளில் வெற்றி பெறும் நான்கு அணிகளும் 13.01. 2026ம் தேதி நடைபெறும் வடக்கு மாவட்ட தொகுதி கள் விளையாட்டுப் போட்டிகளில் கலந்து கொள்ளலாம்.

தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள்

ஈ. தங்கராஜ், வடக்கு மாநகர கழக பொறுப்பாளர் 88386 92465, விஸ்வநாதன், திருப்பூர் வடக்கு ஒன்றிய கழக செயலாளர் 90038 05695, கொ.ராமதாஸ், பகுதி கழக செயலாளர், 15 வேலம்பாளையம் 98432 15015, மின்னல் நாகராஜ், பகுதி கழக செயலாளர், அண்ணா குடியிருப்பு 98949 76761, ஜோதி பகுதி கழக செயலாளர், பாண்டியன் நகர், 94431 43932, போலார் சம்பத்குமார், பகுதி கழக செயலாளர், கொங்கு நகர், 95432 77277, நல்லாசிரியர் ஆர்.முத்துசாமி (கபாடி) 94433 39299,

13.01.2025 செவ்வாய்க் கிழமை காலை 09.00 மணி, வடக்கு மாவட்ட அணிகள் போட்டிகள் நடைபெறும்

கலந்து கொள்ளும் அணிகள்: திருப்பூர் மாநகரம் மண்டலம் 1 பரிசு பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்) திருப்பூர் மாநகரம் மண்டலம் 2 பரிசு பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்)அவினாசி நகரம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்)

அவினாசி ஒன்றியம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்) அன்னூர் ஒன்றியம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்) திருமுருகன் பூண்டி நகரம் வெற்றி பெற்ற 4 அணிகள் (ஆண்கள் பெண்கள்)

வடக்கு மாவட்ட அணிகளுக்கு நடைபெறும் போட்டியில் வெற்றி பெறும் அணிகளுக்கு பரிசுத் தொகை : கபாடி மற்றும் கிரிக்கெட் போட்டிகளுக்கு முதல் பரிசாக ரூ.25,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.15,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.10,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், நான்காம் பரிசாக ரூ.10,000/ மற்றும் பரிசுக் கோப்பையும் வழங்கப்படுகிறது.

கோ கோ போட்டிக்கு முதல் பரிசாக ரூ.15,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.10,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், நான்காம் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும்,

மிதிவண்டி (Slow Cycle Race) போட்டிக்கு முதல் பரிசாக ரூ.5,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், இரண்டாம் பரிசாக ரூ.3,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், மூன்றாம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பையும், நான்காம் பரிசாக ரூ.2,000/ மற்றும் பரிசுக் கோப்பையும் 13.01.2026ம் தேதி மாவட்ட அளவில் நடைபெறும் போட்டிக்குப் பின் பரிசுகள் வழங்கப்படும்.

எனவே, அந்தந்த பகுதியிலுள்ள பள்ளி, கல்லூரி மாணவ மாணவிகள், பொது மக்கள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு கேட்டுக் கொள்கிறோம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழக

# முன்னாள் துணைச் செயலாளர் - கழக மூத்த முன்னோடி செ.கண்ணப்பன் மறைவு!

## கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் இரங்கல்!

**சென்னை, ஜன.12-**

**ஒருங்கிணைந்த சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளரும் கழக மூத்த முன்னோடியுமான செ.கண்ணப்பன் அவர்கள் நேற்று இயற்கை எய்தினார் என்பதை அறிவிக்க வருந்துகிறோம்.**

**தகவல் அறிந்து வருந்திய கழகத் தலைவர் - முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள், அன்னாரின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்து விடுத்துள்ள செய்தி வருமாறு:**

ஒன்றுபட்ட சென்னை மாவட்டக் கழகத்தின் முன்னாள் துணைச் செயலாளராகவும் மாவட்டக் கழகப் பொருளாளராகவும், சென்னை மாநகராட்சி மண்டலக் குழுத் தலைவராகவும், கழகத் தலைமைச் செயற்குழு உறுப்பினராகவும் பதவி வகித்த கழகத்தின் மூத்த முன்னோடி அண்ணன் செ.கண்ணப்பன் அவர்கள், நேற்று இயற்கை எய்தினார் எனும் செய்தி அறிந்து பெரிதும் வருந்துகிறேன்.

இளம் பிராயம் தொட்டு தான் ஏற்றுக் கொண்ட கொள்கையில் இருந்து சிறிதும் வழுவிடாது தீவிர கழகப் பணியாற்றியவர் அவர்.



கழகம் நடத்திய பல்வேறு போராட்டங்களிலும் கலந்து கொண்டு பல முறை சிறையேகியவர் ; கழகத்தின் அடுத்த தலைமுறை இளைஞர்கள் தீவிரமாகப் பணியாற்றுவதற்கு தூண்டுகோலாக இருந்து அவர்களை வழிநடத்தியவர் !

அவரது மறைவு கழகத்திற்கு இழப்பு எனில் அது மிகையல்ல !

அவரது மறைவால் துயருறும் அவரது குடும்பத்தினருக்கும் கழகத்தினருக்கும் எனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

இவ்வாறு அந்த இரங்கல் செய்தியில் கழகத் தலைவர், முதல்வர் மு.க. ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டுள்ளார்.



பெரம்பலூர் மாவட்ட செயற்குழு கூட்டம், பாலக்கரையில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில்,மாவட்ட அவைத்தலைவர் அ.நடராஜன் தலைமையில் நடைபெற்றது. மாவட்ட கழக பொறுப்பாளர் வீ.ஜெகதீசன் சட்டமன்ற உறுப்பினர் எம்.பிரபாகரன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். இந்த கூட்டத்தில், மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் குன்னம் சி.இராஜேந்திரன், மாநில பொறியாளர் அணி துணைச் செயலாளர் இரா.ப.பரமேஷ்குமார், தலைமை செயற்குழு உறுப்பினர் வழக்கறிஞர் என்.ராஜேந்திரன், பொதுக்குழு உறுப்பினர் கி.முகுந்தன், பட்டுச்செல்வி ராஜேந்திரன், செ.அண்ணாதுரை, டி.கே. ராமச்சந்திரன், ஆர்.முருகேசன், தொகுதி பார்வையாளர்கள் தங்க.சித்தார்த்தன், ஏ.கேஅருண், மாவட்ட துணைச் செயலாளர்கள் தழுதாழை பாஸ்கர்,சன்.சம்பத், மாவட்ட பொருளாளர் செ.ரவிச்சந்திரன் உள்ளிட்ட கழக நிர்வாகிகள் உள்ளனர்.

## பாஜகவின் விபரீதக் கூட்டணி!

